சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | குத்புதின் |
| கணவர் பெயர் | : | குலாம் முகமது |
| கிராமம் | : | அடியக்கமங்கலம் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | சமையல் வேலை |
| வயது | : | 42 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7 மற்றும் 10 ம் எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 ம் எதிரிகள் இருவரும் வேறு வேறு வழக்குகளில் முறையே 8 ம் எதிரி மதுரை மத்திய சிறையிலும், 9 எதிரி கோவை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவர்களை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ளது. 8 ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். 9 ம் எதிரி கோவையில் உள்ள சிறையில்

இருந்து வீடியோ கான்பிரென்ஸ் மூலம் எதிரி ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று மேற்படி 9 எதிரி வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகியுள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வீடியோ கான்பிரென்சின் மூலம் ஆஜராகியுள்ள ஆஜராகியுள்ள 9 எதிரியை எனக்கு தெரியாது. அகரத்திருநல்லூர் கிராமத்தை சேர்ந்த செல்வமணி மகன் குமரேசன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்களை சாட்சி பார்த்துவிட்டு தனது கையொப்பம் இல்லை என கூறுகிறார். போலீசார் என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 14.11.2021 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் கிடாரம்கொண்டான் என்ற ஊரில் மெயின் ரோட்டில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தை சேர்ந்த போலீசார் அங்கு விசாரணை மேற்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது நானும், நவாஷ் என்பவரும் உடன் இருந்தோம் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் அங்கு விசாரணை செய்தபோது நானும், நவாஷ் என்பவரும் உடன் இருந்தோம் என்றும், குமரேசன் என்பவர் கொலை செய்யப்பட்டதாக சொல்லப்படும்

இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், மேலும் அந்த இடத்தில் இறந்து போன நபர் ஓட்டி சென்ற TN 50 Ac4192 என்ற ஸ்பிளன்டர் இரு சக்கர வாகனத்தையும், செல்போன் ஒன்றையும், ஒரு ஜோடி செருப்புகளையும் அந்த இடத்தில் இருந்து எடுத்தார்கள் என்றும், அப்போது போலீசார் மகஜர் ஒன்று தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும் நவாஷ் என்பவரும் போலீசார் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையில் திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் மேற்படி சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டு தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் சான்று பொருள் கைப்பற்றும் போது தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் ஆகியவைகளில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றும், போலீசார் விசாரணை செய்தபோது வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றும், தற்போது வேண்டும் என்றே உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.07 17:10:46 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.